**O.S. No.24/2024**

**25.08.2025**

**பி.சா.1**

**திருமதி கோப்பெருந்தேவி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (6 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில்)**

என்னுடைய கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்தார். வாதி என் மகன். என் கணவர் அத்திக்கடை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கணக்கு வைத்திருந்தார். தாவா சொத்துக்கள் என் கணவரால் உழைத்து வாங்கப்பட்டது. சமூகம் நீதிமன்றம் போடும் இறுதியான உத்திரவுபடி 6 முதல் 11 பிரதிவாதிகள் நடக்க தயாராக உள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 6 ம் பிரதிவாதியை பொறுத்து உரிய முத்திரை கட்டணமும் சட்டப்படியான ஆவணங்கள் முறையாக இருந்தால் பதிவு செய்யப்படும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 7 முதல் 11 பிரதிவாதிகள் தேவையற்ற தரப்பினர் என்பதால் அவர்களை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.08.25 15:45:56 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.